மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: **திரு.T.கோகுலகிருஷ்ணன் B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **டிசம்பர்** மாதம் **01**ம் நாள்
**சுபகிருது** ஆண்டு **கார்த்திகை** மாதம் **15**ம் நாள் **வியாழ**க்கிழமை
CNR No. TNMD190000-16 -2021
**I.A.No. 529/2022**
**in**
**O.S No. 05/2021**

சங்கர்
... மனுதாரர்/பிரதிவாதி
//எதிர்//

1. அம்மாவாசை
2. சக்கரையம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு **01.09.2022ம்** தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M.**ரமணி** மற்றும் திருமதி M.**சடைமுனி** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.**P.**சக்திவேல்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **20.10.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 1 முதல் 7 ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி கோரி கட்டளை 8 விதி 1A(3) உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் ஆவார் என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில், தாவா சொத்தானது மனுதாரர்/பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்டது, அதன் பின்பு, மனுதாரர்/பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தாவா

சொத்தில் வாதிகளோ, வாதியின் தந்தையோ எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றும், தாவா சொத்தை நாளது தேதி வரை மனுதாரர்/பிரதிவாதியின் கைவசம் வைத்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்றும், தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்/பிரதிவாதியின் பெயரில் உள்ள கணினி சிட்டா, மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை கருப்பண மூப்பன் பெயரில் உள்ள அடங்கல், மற்றும் ரசீதுகள், மனுதாரர்/பிரதிவாதி பெயரில் உள்ள ரசீதுகள் மற்றும் மின்கட்டண ரசீதுகள் தாவா சொத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட OS.No. 53/2014 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்புரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தானது சர்வே எண். 717/5 சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வாதிக்கு எதிராக தள்ளுபடி ஆகிவிட்டதை மறைத்துவிட்டு மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளது தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், தாவா சொத்தான சர்வே எண். 715/5-ல் பிரதிவாதிகள் கூட்டு அனுபவத்தில் உள்ளதால் கூட்டு உரிமையாளருக்கு எதிராக வாதி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றும், ஆகையால், வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வாதத்தை நிரூபிக்க முக்கியமானது என்றும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு சட்டப்படியான ஆட்சேபணை இருக்க வாய்ப்பில்லை என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிர் மனு உரையின் சுருக்கம்:**

1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவார் என்றும், 2ம் எதிர்மனுதாரரரின் சகோதரி சார்பாகவும் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டா எண். 643-ஐ வாதி தரப்பில் ஏற்கனவே குறியீடு செய்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதால், அதனை மீண்டும் குறியீடு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அடங்கல் ஆவணத்தில் பிரதிவாதி பெயர் இல்லை மற்றும் போலியான ஆவணம் ஆகும் என்றும், 10.06.2016 பசலி இரசீதில் பட்டா எண். 1465 என்பது வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாதது என்றும், 21.06.2022 பசலி ரசீது பிரதிவாதி பெயரில் இல்லை என்றும், அசல் வழக்கு எண் 53/2014 வழக்கானது, தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட பின் வழக்கு மூலம் மாறுப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அசல் வழக்கு எண். 53/2014 வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மின்கட்டண இணைப்பு எதிர்மனுதாரர்கள்/வாதியின் தந்தை முத்தையா பெயரில் உள்ள நிலையில், மின் கட்டணம் செலுத்தப்பட்டதால் பிரதிவாதிக்கு உரிமையானது அல்ல என்றும், வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனு அபிடவிட் மற்றும் எதிர்மனு உரை இந்த நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு

எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

**4**) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகளும் மற்றும் வழக்கு கோப்புகளும் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5) இம்மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்திட நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பு ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி கட்டளை 8 விதி 1 (A) உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவின் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணைகள் முழுமையாக விசாரணை முடிக்கப்பட்டதற்கு பின்னர் இந்த மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணைகள் தொடங்க வேண்டி நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்/பிரதிவாதியால் சாட்சி விசாரணையில் ஆவணங்கள் குறியீடு செய்திட அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்/1ம்பிரதிவாதியால் ஆவணம் குறியீடு செய்திட அனுமதி கோரப்பட்ட மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

8) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனுஉரையை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி, எதிர்மனு உரையில் குறியீடு செய்யக்கூடிய ஆவணம் குறித்து ஆட்சேபணை செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்தும் எதிர்மனு உரையில் சொல்லப்பட்டுள்ளது.

9) மேற்படி குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களால் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும், மேலும், குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் உண்மைத்தன்மையைக் குறித்து இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் குறுக்கு விசாரணையின் மூலம் பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பு உள்ளது என்பதினாலும், அசல் வழக்கின் தன்மைக்கருதியும், நீதியின் நலன்கருதியும் இம்மனு அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**1) மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை

**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்**கள்: இல்லை.

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//